257

உ

கடவுள் துணை.

வித்தியாபாநு.

மதுரையில் பிரசுரமாகும்

ஒரு மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

தொகுதி. க. } சௌமிய௵ தைமீ { பகுதி க௦.

வானம்பாடி.

—:o:—

உலகத்தில் நாகரீக மக்கள் பேசும் நாநா பாஷைகளிலுமுள்ள காவியங்களில் பட்சிகளைக் குறித்துப் பலவிதமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆரிய வர்த்தப் புலவர் பெரு மக்கள் அன்னம், கிளி, மயில், குயில், நாரை, கருடன் ஆதியவற்றைவர்ணித்துள்ளது போல் மேற்றிசைப் புலவர்கள் வானம்பாடி, பரிகசிக்கும் பறவை, இராப்பாடி (Night-in-gale) முதலியவற்றைப் பற்றி அலங்காரமாய் வர்ணித்திருக்கிறார்கள். இவற்றில் ஷெல்லி, ஜேம்ஸ்ஹாக், ஷேக்ஸ்பியராதியோரால் பலவிதமாகப் பாவித்துப் பாடப்பட்ட வானம்பாடியே நமது விஷயமாகும்.

இடம்:—இதுஐரோப்பாவில் இங்கிலாந்து, பிரான்ஸ், இட்டலி, கிரீஸ்முதலிய பலவிடங்களிலும், ஆசியாவில் நேபாளம், வடசீனு, பஞ்சாப், பாரவஸீகம், பாலஸ்தீனு முதலிய இடங்களிலும் ஆபிரிகாவில் ஈஜிப்ட் பார்பாரி ஸ்டேட்டாதியஇடங்களிலும், விசேஷமாய்க் காணப்படும் அமெரிக்காவில் அதனைக் காண்பதரிது. ஆஸ்திரேலியாவில் காணப்படுவன ஐரோப்பாவிலிருந்து அங்குக்கொண்டுபோகப்பட்டுப் பல்கியவைகளே. மாரிகாலங்களில் இவை பேரோ தீவு (Faroe Isles) களிலும், குரைல் தீவு (Kurile Islands) களிலுமே மிகுதி.

தோற்றம்:—இஃதொரு சிறு குருவி. இது மயில், எருத்துவாற்குருவி முதலியவைகளைப் போல் பார்வைக்குப் பகட்டானதும் ஒய்யாரமானதுமன்று. அதன் கால்களின் பின்விரல் குருவியின

த்தைச் சார்ந்த ஏனைய பறவைகளின் விரல்களைக் காட்டிலும் நீள மாயிருக்கும்.

இப்புள்ளின்நீளம் 7 அங்குலம். நிறம் பழுப்பு. கரும் புள்ளிகள் நிறைந்து, மங்கிய மஞ்சள் நிறத்தோடு இதன்மார்பு இருக்கும். இக் குருவிக்கு ஓர் அழகிய சின்னஞ் சிறு உச்சிக் கொண்டை உண்டு. மூக்கு நீண்டு கூர்மையாயிருக்கும். அதன் விரல் வளைந்திராமல் நீண்டு நேராக இருக்கும்.

இயற்கை விசேஷங்கள்:—வானம்பாடி காலப் பொழுதை அறி விக்கும் கட்டியக்காரன்போல்வது. வசந்த காலத்தின் வருகையை உ த்துணர்வது. இதுஏனைப்பல்பாடும் பறவைகளைப் போன்று மரத்தில் வாழ்வதில்லை. ஊர்க் குருவியையும் பருந்தையும் பார்க்கிலும் அது அதி உயரத்தில் பறந்தாலும், அதன் வாசஸ்தலம் தரையே. அதன் நகம் நீண்டு நேராய் வளர்ந்திருப்பதினாலேயே அது தன் விரல்களால் மரக் கொம்புகளைப் பற்றி உட்கார முடியாது. புலங் களிலும் புறதரைகளிலும் அதி வேகமாய் ஓடுதற்கேற்ற விதமாக அதற்குக் கால்கள் அமைக்கப் பட்டுள. நிற்க.

பக்ஷி ஜாலங்களில் பெரும்பான்மைய விட்டு விட்டுப் பாடுவது வழக்கமாய் இருக்க, வானம்பாடி மட்டும் ஒருதரம் பாட ஆரம்பித்து விட்டால் தன் பாட்டு முடிகிற வரை கொஞ்சமும் சுலிப்பின்றி மூச் சுவிடாமற் பாடித் தீர்க்கும். வேறு சில விசேஷங்களும் இதனிடத் துண்டு: பாடும் பறவைகள் யாவும் யாதானும் ஓர் இடத்தில் தங் கியே பாட நாம் பார்த்திருக்கிறோம். ஆனால் பாடிக்கொண்டே உய ரப் பறப்பதும் பறந்துகொண்டே பாடுவதும் வானம்பாடியின் இய ற்கை. இவ்வாறு செய்யும் பக்ஷி இஃது ஒன்றேதான். இக்குணம் பற்றியே இதற்கு வானம்பாடி என்ற பெயர் வழங்கியதுபோலும். இது இளைப்பாறும்நேரம்தவிர எப்பொழுதும் ஆகாயத்தில் பறந்து பாடிக்கொண்டே இருக்கும். பாடா தொழிந்த காலத்தில் மட்டும் அதனை தரையில் காணலாம்.

அது அம்பினும் விரைவாய் ஆகாயத்திற்கிளம்பி, 'நட்பம்ஆய் குரக்கும் அதிசயம் பயப்ப' ஓர் நொடிவரைப்பொழுதில் மறையும். பின்பு அது கண்ணுக்குப் புலப்படாவிடினும் அது பாடுகிற சத்தம் மட்டும் நமது காதில் விழும். அதன்குரல் தீர்க்கமாயும், தெளிவாயும்

தெவிட்டாத இன்பத்தை விளைக்கக் கூடியதாயு மிருக்கும். இப்பறவை ஆகாயத்தில் உயர உயர அதன் இன்னிசை அதிகரித்துக்கொண்டும் கீழே இறங்கும் பொழுது அது வர வரக் குறைந்துகொண்டும் வரும். அதுசூரிய அஸ்தமனம் வரை இடை இடையே பாடிக் கொண்டிருந்து 'பாது நெடுந்தேர் படுகடலிற் பாய்ந்ததும்' தனது பைம்புல் மனைபோய் அடையும். தனது இறகை உதிர்க்கும் பருவம் தவிர மற்றைப் பருவங்களிளெல்லாம் அது பாடும்.

கூடு:—இப்புள் பைம்புல்லேனும், பயிரேனும் வளம்பெற வளர்ந்த மைதானங்களிலும் புலங்களிலும் குதிரையின் காலடிபட்டு அழுந்திப் பள்ள மாயுள்ள குழிகளில் காய்ந்த சுள்ளிகளையும் புற்களையும் பரப்பிக் கூடு அமைத்து வாழும்.

முட்டையும் குஞ்சும்:—வானம்பாடி வருஷத்திற்கு இருமுறை முட்டையிடும். அதன்பேறுகாலம் பெரும்பாலும் வைகாசி மாதமும் ஆடி அல்லது ஆவணி மாதமுமாகும். அது தடவைக்கு மூன்று முதல் ஆறு முட்டைகள் வரை இடும். இம்முட்டைகள் கருமையும் பழுப்பும் கலந்த புள்ளிகள் நிறைந்தனவாய் சாம்பல் நிறத்துடன் இருக்கும்.

பெண் குருவி அடைகாத்துக் கொண்டு இருக்கும் பொழுது ஆண் குருவி ஆகாயத்தில் பறந்து தனது இனிய குரலால் தனது காதலியைக் களிப்பிக்கவும், அதற்கு ஆகார முதலியன கொண்டுவந்துகொடுக்கவும் செய்யும். தாய்ப் பறவைக்குத் தன்குஞ்சுகளிடத்தும்,முட்டைகளிடத்தும்மிகப்பிரீதி. முட்டைகள்வெடித்துக் குஞ்சாகிப் பறந்து தம்மைத் தாமே காப்பாற்றிக் கொள்ளும்படியான சக்தி அவைகளுக்கு வரும் வரை ஆணும் பெண்ணும் அவற்றை அதிஜாக்கிரதையாய்ப்பாதுகாக்கும். அவற்றிற்கேதேனும் ஆபத்து நேரிட்டால் அவைகள் தம்முயிரைக் கொடுத்தேனும் தம் குஞ்... காக்கச் சித்தமாய் இருக்கும்.

புலங்களில் இவை கூடு கட்டியிருக்கு... மனிதர்கள் கண்ணுக்குத் தென்படா தாயினு... துக் கருகில் எங்கேனும் கதிர்கள் அறுக்கப்ப... கண்டுகொண்டுவிட்டால் தக்ஷணமே அ... மான இடம்தேடிச்சென்று, திரும்பி வந்... சுகளைப் பத்திரமாய்ச் சேர்ப்பிக்கும்.

உணவு:—வானம் பாடியின் கோடைகால உணவு பூச்சி புழுக்களே. மாரிகாலத்தில் அவை பூமியில் விதைக்கப் பட்டும், மானுஷக் கிருஷியின்றித் தாமாகவே முளைத்துமுள்ள பலவகைப்பட்ட விதைகளைத் தின்று பிழைக்கும்.

உபயோகங்கள்:—இஃதினிய குரலுடன் கூடியதால் இதன் பாட்டைக் கேட்டு ஆனந்திக்குமாறு அநேகர் இதனைப் பிடித்துக் கூட்டில் அடைத்துப் பட்சமாய் வளர்ப்பார்கள். இது அகப்படாத இடங்களில் இதற்கு எவ்வளவு விலை கொடுத்தும் பணக்காரர்கள் வாங்கத் தயாரா யிருப்பார்கள்.

வானம்பாடியின் மாமிசம் மிக்க கொழுப்பும் உருசியும் உள்ளதாம். ஆதலின் அங்குள்ளோர் அதனைப்பிடிக்க வலை விரித்தும் பூமியிற் கண்ணிகள் வைத்தும் பலவகைப்பட்ட தானியங்களைத் தெளித்து வைத்து எங்கேனும் பதுங்கிக்கொண்டிருப்பார்கள். சிறிதுநேரத்திற்கெல்லாம் தீனியைக் கண்டுகொண்ட பறவைகள் அவற்றைத் தின்னும் பொருட்டுப் போய் உட்காரும். அப்பொழுது அவைகளில் எண்ணிறந்தவை அகப்பட்டுக்கொள்ளும். பல தம்மைத் தளையினின்றும் விடுவித்துக்கொள்ளச் செய்யும் முயற்சியில் சுருக்குண்டு சாகும். எஞ்சியவை தவித்துத் தத்தளித்துக்கொண்டிருக்கும்போதே குற்றுயிரோடு எடுபட்டுக் கூடையில் அடைக்கப் படும். லண்டன் சந்தையில் இவை பவுனுக்குப் பத்துப் பறவைகள் வீதம் விலைபாகின்றனவாம். டன்ஸ்டேல் என்ற இடமே வானம்பாடி வியாபாரத்திற்குப் பேர்பெற்ற இடம். நிற்க.

படிப்பினை:—இது வானம் நோக்கிச் செல்லச் செல்ல மகிழ்ந்து பாடுவதையும் பூமிநோக்கி வரவர அப்பாடல் குறைவதையும் நோக்குங்கால், பரலோகவாழ்விற் பெருவிருப்பும் இகலோகவாழ்வில் அருவருப்பும் கொண்டுள்ள மெய்ஞ்ஞான நிலையைக் குறிப்பிக்கின்றதா
...து.

...டம் மனமும் களிக்கப்பாடும் கானரசம் மிருத்த
... ஊனைத்தின்றேனும் தமது ஊனைப் பெருக்க
...லும் பேதைமாக்கள், தாங்கள் இவற்றிற்குச்
... அறிந்து நல்வழிப்படுவது எக்காலமோ!

பத்திராதிபர்.

கள் முத்திரையிட்டு வழங்கச்செய்யவும், யாருக்கேனும் பட்டப் பெயர்கொடுக்கவும், வேண்டிய அதிகாரமும்மன்னனதேயாம். நூதன சட்டம் ஏற்படுத்தின், அதற்கும் அரசன் சம்மதம் அவசியமே. வேந்தனுக்குரிமையான இவ்விஷயங்கள் யாவும் நாம் முன்கூறிய வாறே இப்பொழுது மந்திரிகளின் ஆலோசனையைத்தழுவி அரசனு லாவது அல்லது அரசனுக்குப் பிரதிநிதியாய் மந்திரிகளாலாவது நிறைவேற்றப்படுகின்றன.

பார்லிமெண்ட் சங்கத்தின் அனுமதி சிறிதுமின்றி எத்தீர்வையும் வாதித்தல்கூடாது; எச்சட்டத்தையும் யாருக்காவது அழிக்கவாவது மாற்றவாவது கூடாது. ஒருவனைச் சட்டப்படி விசாரணைசெய்து தீர்மானித்தாலல்லாமல் மனம்போனவாறு தண்டிக்கவும் கூடாது சிறைவைக்கவும்கூடாது.

பஞ்சாயத்தாரை நியமித்துக் குற்றவாளிகளை விசாரித்தல் வேண்டும். நீதியைப் பொருளைக் கருதி விற்கவும், நியாயத் தீர்ப்பை தாமதப்படுத்தவும் கூடாது.

பு. து. இரத்தினம்பிள்ளை.
திருமுல்லைவாசல்.

அக்பரின் காலக்ஷேபம்.

(264-ம் பக்கத்தொடர்ச்சி.)

ஒரு தினமாகிய 24 மணி நேரத்தில் இரண்டு தடவை சகல ஜனங்களுக்கும் சக்ரவர்த்தி பேட்டி கொடுப்பார். காலைக்கடன்களை முடித்த உடனே முதல் தடவை பேட்டி. அப்போது அவர் ஜரோகா (Jarokha) என்னுமிடத்தில் யாரும் பார்க்க வீற்றிருப்பார். எல்லாரும் காவற்காரர்கள், கட்டியக் காரர்கள், சோப்தார்கள் துருப்புகள்-இவர்கள் உபேக்ஷையன்றியில் தாராளமாய்ப் பார்க்கலாம். இதற்குத் தான் “சக்ரவர்ததி தரிசனம் கொடுத்தல்” என்று வழங்குவது. இந்த சமயத்தில் ராஜ்ய காரியமான அனேக வேலைகள் நடந்தேறும். இரண்டாமுறை தரிசனம் அவர்

"தவலத் கானு"வில் வீற்றிருக்குங் காலத்தில். அந்த தவலத்கானுவுக்குப் பெரும்பான்மை காலை 9 மணிக்கெல்லாம் செல்வார். அந்த மண்டபத்தில் எல்லாரும் சென்று அவர் முன்பு ஆஜராவார்கள். இந்த தர்பார் சிலசமயம் மாலையிலும் சில சமயம் இரவிலும் கூடுவதுண்டு. அனேக சமயம் "தவலத் கானு"வுக்கு கொண்டுவந்துவிடும் ஒரு சாளரத்தில் யாவர்கண்களுக்கும் புலப்படும்படி வீற்றிருந்து ஒருவர்சிபார்சு மில்லாமல் தாமாகவே வந்திருப்பவர்களிடம் நேரே (பிரியாது) மனுக்கள் தமது கையாலேயே வாங்கிப்பார்வையிட்டு அவற்றிற்குத் தக்கபடி நியாயமாக உத்திரவளிப்பார். ஸர்க்கார் உத்தியோகஸ்தர்கள் ஒவ்வொருவரும் தங்களுடைய குறைகளை ராஜசமுகத்தில் தெரியப்படுத்திக் கொள்வார்கள். அவர்களுக்கெல்லாம் வேண்டியவைகளைச் செய்து இன்னின்னபடி நடத்தவேண்டுமென்று புத்திமதி யுரைத்தனுப்புவார்.

அவர் எல்லாருக்கும் நடு நிலைமையாக நியாயம் செய்யத்தீர்மானம் உள்ளவர். பிரஜைகளெல்லாம் க்ஷேமமாக சந்தோஷத்துடனிருக்க நடப்பவர். அவர்கள் சந்தோஷமாயிருந்தால் தான், தாம் ஆநந்தமாயிருக்கலா மென்பதைத்திர உணர்ந்தவர். ஆதலின், அவர் வழக்குகளை விசாரணை செய்யும் காலத்தில் கொஞ்சமேனும் ஆத்திரம் கோபம் என்பதே வரவொட்டாமல் அமரிக்கையுடனும் மனச்சாந்தத்துடனு மிருப்பார்.

சக்ரவர்த்தி கொலுக்கூட்டுவதா யிருந்தால் அது விஷயம் ஒரு பெரிய பேரிகை நகாரா அடிப்பதன் மூலமாய் பிரசித்தம் செய்யப்படும். அப்போது சகலரும் அறிந்து கொண்டு தொண்டமான் முதல் தோட்டிவரை உடனே கொலுவுக்கு வந்து கூடுவார்கள். அவரவர்கள் அந்தஸ்துக்குத் தக்கபடி அணியணியாய் ராஜ சன்னதி முன் நிற்பார்கள். அவர்கள் சக்கிரவர்த்தியை கூர்னீஷ் என்னும் ஸ்தோத்திரத்தால் தொழுவதற்குத் தயாராயிருப்பார்கள். அப்போது வித்துவான்கள், கைத்தொழிற் காரர்களான கொல்லர், தச்சர், தட்டார், செசவுகாரர் முதலானவர்களெல்லாம் அவரவர்களுக்கு வேண்டிய வற்றைச் சக்ரவர்த்தி முன் தெரியப்படுத்திக் கொள்வார்கள். தேவாலய தர்மசத்திர அதிகாரிகளும் நானு இலாகா

உத்தியோகஸ்தர்களும் தங்கள் இலாகாவுக்கு வேண்டியவைகளைத் தெரியப்படுத்திக் கொள்ளுவார்கள். முன்ஷிப்கள் முதலிய நீதித் தலைவர்கள் தாம்தாம் நடத்திய நடவடிக்கைகளைப் பற்றிய அறிக்கையைப் படிப்பார்கள். இக்காலங்களில், கொலு மண்டபத்துக்கு முன், மல்யுத்தம், குஸ்தி, சிலம்பம் நடக்கும். சகல சங்கீதமும், வாத்திய கோஷங்களும் அப்பொழுது காணலாம்.

சக்கரவர்த்தியை இருவிதமாக வணங்குவதுண்டு: அவை கூர்னீஷ் (Koornish,) துஸ்லீம் (Tuslim) எனப்படும்.

கூர்னீஷ்:—வலதுகை உள்ளங்கையை நெற்றியில் வைத்துக் கொண்டு தலையைக்குனிந்து கொள்ள வேண்டும். இவ்விதம் சிரமேற் கைகுவித்து வணங்குவது சபையோருக்கெல்லாம் மரியாதை செய்வதாகும்.

துஸ்லீம்:—வலது புறங்கை பூமியிற் படியவேண்டும். குனிந்த மனிதன்நிமிரநிமிரப் புறங்கையும் மெதுவாகஉயரவேண்டும். நேரே நிமிர்ந்த பிறகு உள்ளங் கையைத் தலைமேல் வைத்துக் கொள்ள வேண்டும்.

இது விஷயமாய் சக்ரவர்த்தி ஓர் விருத்தாந்தத்தைச் சொன்னார். அதாவது:—“ஒரு நாள் என் அருமைப் பிதா எனக்கு ராஜ குமாரன் தரித்துக்கொள்ள வேண்டிய குல்லாவை அன்புடன் அளித்தார். அதைத் தலையில் வைத்துக் கொண்டேன். அது என் தலைக்கு மிகவும் பெரிதாயிருந்தது. தலையிலிருந்து நழுவிக் கீழே விழுந்து விடுமென்று நான் என் இடக்கையால் அதைத் தாங்கிக் கொண்டு மேற் சொல்லிய துஸ்லீம் அனுஷ்டானப்படி குனிந்து வணங்கி நின்றேன். இந்த துஸ்லீம் நானாகவே நூதனமாய் அப்போதைக்கு என் புத்தியிலுதித்துச் செய்தது. என்பிதா இதைக்கண்டு வெகு மனச்சந்துஷ்டி யடைந்தவராய் என்னை மிகவும் அன்போடு மெச்சினார். அதுமுதல் இந்த துஸ்லீம் அனுஷ்டானம் ஊர்ஜ்ஜிதத்திற்கு வந்தது” என்றார். கொலு மண்டபத்தில், ஜாகீர், அந்தஸ்த் துயர்த்தும் உடுப்பு, யானை, குதிரை இவைகளைப் பரிசாகப் பெற்றவர்கள் விடை பெற்று செல்லுங்காலத்தில் இந்தத் துஸ்லீம் வணக்

கம் மூன்றுதரம் செய்ய வேண்டும். மற்ற வேளைகளில் ஒருதரம் செய்தாலே போதுமானது.

முன் காலங்களில் சிரசு தரையிற்பட வணங்கவேண்டுமாம். அப்படி வணங்குவது சர்வ வல்லமையுள்ள கடவுளுக்கு மட்டும் உரித்தேயன்றி மானிடர்களுக்கு பகிரங்கமாக வணங்குவது தகாதெ தன்று அவ்வழக்கத்தை சக்ரவர்த்தி நிறுத்திவிட்டார். ஆயினும், சக்ரவர்த்தி தனிமையாயிருக்குங் காலத்தில் யாராவது வந்து அரசன் உட்காரும்படி உத்தரவளித்தால் அவன் தலையை தரையிற் படியும்படிப் பணிந்து பிறகு உட்காருவது வழக்கம்.

(இன்னும் வரும்)

ம. ஜகதீசையர்.

பர்த்ருஹரி நீதிசதகம்.

(276-ம் பக்கத்தொடர்ச்சி).

8-வது தைரியப்படலம்.

72. பெருங்கடலிலுள்ள இரத்தினங்களை யடைந்தும் தேவர்கள் திருப்தியடைந்து நின்றுவிடவில்லை. ஆலகால விஷத்தைக்கண்டு நடுங்கிவிடவுமில்லை. அமிருதத்தை யடையாமல் தாங்கள் எடுத்த முயற்சியைக் கைவிடவுமில்லை. தைரியவான்கள் தாங்கள் எடுத்த காரியத்தை (முடிக்காமல்) விடுவதில்லை.

73. இடையூறுகளுக்குப்பயந்து, கீழோர் ஒருகாரியத்தையும் தொடங்குவதேயில்லை. நடுவினரோ, ஒரு காரியத்தைத் தொடங்குவார்கள்; ஆனால் இடையூறுகள் நேர்ந்தால் (மட்டும்) கைவிட்டு விடுவார்கள்; உத்தமர்களோ, தாங்கள் ஒருகாரியத்தைத் தொடங்கி விட்டால் எவ்வளவு இடையூறுகள் சம்பவித்தாலும், அதைக் கைவிடார்கள்.

74 சிலவிடத்தில் தரையில் படுப்பதும் சிலவிடத்தில் உயர்ந்த படுக்கையில் படுப்பதும், சிலவிடத்தில் இலைகளைத்தின்பதும்,

சிலவிடத்தில் (சாலி) அரிசியன்ன முண்பதும் சிலசமயத்தில்கந்தைகளை யுடுப்பதும், சிலசமயங்களில் உயர்ந்த ஆடையுடுப்பதும், இவ்வாறாகத் தாங்கள் முயன்ற கருமத்திலே கண்ணாயினவர்கள் மனோதைரியத்துடன், சுகதுக்கங்களைக் கவனியார்.

75. நீதிமான்களிகழ்ந்தாலும் புகழ்ந்தாலும், ஸம்பத்து எவ்வளவு வந்தாலும் போவதானாலும், மரணம் இன்றைக்கேற்பட்டாலும், அல்லது ஒருயுகம் கழித்து ஏற்படுவதானாலும் தைரியவான்கள் நியாயவழியினின்று ஒருஅடிகூடப் பிசகார்கள்.

76. எவன் மனமானது காதலிகளின் கடைக்கண்பார்வையாகிய பாணங்களால் பேதிக்கப்படவில்லையோ, எவன்மனமானது கோபாக்கினிதாபத்தால் எரியவில்லையோ விஷயசுகங்களாவது பேராசை, (கயிறு) ஆவது எவன்மனதில் ஆசையுண்டுபண்ணக்கூடவில்லையோ அப்படிப்பட்ட தீரன்தான் இம்மூவுலகையும் ஜயிக்கக்கூடியவன்.

77. தைரியமே பிறவிக்குணமாயமைந்துள்ள ஒருவன், எவ்வளவு கேவலமான நிலைமையடைந்தாலும், அந்தத் தைரியகுணத்தை மாத்திரம் அழிக்கமுடியாது. நெருப்பைத் தலைகீழாய்ப் பிடித்தாலும், அதன் ஜ்வாலை ஒருக்காலும் கீழ்நோக்கி யெரிவதில்லை.

78. உயர்ந்த மலையுச்சி ப்ரதேசத்தினின்று அதன் மேடு பள்ளமான தாழ்வரையிலுருண்டு கடினமான கற்களினிடையே மோதி நொறுங்குவது நலம். கூர்மையான பற்களுடன் கூடிய பாம்புராஜன் வாயில் கைவிடுவது நலம். நெருப்பில் மூழ்குவதும் நலம். ஆனால் நல்வழியினின்று மாத்திரம் விலகலாகாது.

79. உலகெலா மழிக்கத்தக்க நல்லொழுக்கம் எவனிடத்தில் விளங்குகின்றதோ, அவன் விஷயத்தில் நெருப்பு நீர் போலவும், கடல் உடனே ஓடைபோலவும், மேருமலை சிறுகல்போலவும், சிங்கம் மான்போலவும், பாம்பு மாலைபோலவும், விஷரஸமானது அமிருதவர்ஷமாகவும் (அலக்ஷியமாய்) ஆய்விடுகின்றன.

80. வெட்டுண்ட மரம் (மறுபடி) வளர்கின்றது. சந்திரன் (கலை) குறைந்தாலும் (மறுபடி) விருத்தியடைகின்றான். இவற்றை

யெல்லாம் ஆலோசித்துத் தான் நல்லோர், எவருக்குத் துன்பம் நேரிடினும் மனங்கலங்குவதில்லை.

81. ஐசுவரியத்துக்கழகு நல் (லவர்) நடக்கை. சௌரியத்துக்கழகு வாயடக்கம். அறிவிற்கழகு உபசாந்தி. கல்விக்கழகு வணக்கம். செல்வத்துக்கழகு நல்விஷயத்தில் செலவழித்தல். தவத்துக்கழகு கோபமின்மை. சூரனுக்கழகு க்ஷமை. தர்மத்துக்கழகு யாதொன்றும் எதிர்பாராமலே செய்தல். இவையெல்லாவற்றிற்கும் ஆதாரமாய் விளங்கும் சீலமே எல்லோருக்கும் உயர்ந்த ஆபரணம்.

9 வது விதிப்படலம்.

ஆலோசனைக்கு ப்ரஹஸ்பதி; ஆயுதமோ வஜ்ரம்; ராணுவமோ தேவர்கள்; ஸ்வர்க்கமாகிய கோட்டை; மகாவிஷ்ணுவின் அநுக்ரஹம்; ஐராவதமென்ற யானை—இவ்வளவு அற்புதமான பலத்துடன்கூடிய இந்திரனே, யுத்தகளத்தில் பகைவர்களால் தோல்வியடைவதென்னால், விதிதான் எல்லாவற்றிற்கும் காரணமென்று நன்குவிளங்குகின்றதல்லவா? சீ. சீ !! பௌருஷத்தாலாவதென்ன?

83. ஒரு பாம்பு, பெட்டியிலடைபட்டு, (வெளியேறும்) ஆசையற்றுப் பசியால் ஐம்புலன்களும் சோர்ந்து கிடக்கையில், இரவில் ஒரு எலியானது அப்பெட்டியைத் துளைத்துக்கொண்டு தானுகவே அப்பாம்பின் வாயில் விழ, அப்பாம்பு அவ்வெலிமாமிசத்தைத்தின்று திருப்தியடைந்து (பசியையாற்றிக்கொண்டு), அவ் (வெலிவந்த) வழியாகவே துரிதமாய் வெளியேறித்தப்பித்துக்கொண்டது. சும்மா இருங்கள். மனிதர்களின் உயர்வுக்கும் தாழ்மைக்கும் விதி தான் காரணம்.

84. மேலோர் தாழ்வடைந்தாலும், கீழே விழுந்த பந்தைப்போல் (மறுபடி) கிளம்பி (உயர்ந்து) விடுவார்கள். கீழோரோ மண்கட்டி வீழ்வதுபோல தாழ்ந்தேபோகிறார்கள் (மறுபடி உயர்வதில்லை).

85. வழுக்கைத்தலையனொருவன், சூரிய கிரணங்களால் தன் தலையெல்லாம் தபிக்க, நிழல் தேடி விரைவாய்ச்சென்று கடைசியாக

பனைமரத்தடி சேர்ந்தான். அப்பொழுது அப்பனைமரத்தினின்று ஓர் பெரும் பனம்பழம் அவன் தலைமேல் விழ, தலைபடீரென்று வெடித்தது. ஆதலால் விதிவசத்துக்குட்பட்டவன் எங்கே சென்றாலும் அவன் கஷ்டமும் கூடவே செல்லுகின்றது.

86. யானை, பாம்பு, பக்ஷி—இவைகள்கூடக் கட்டுப்படுகின்றன. சந்திர சூரியர்களுக்குக்கூட க்ரஹங்களால் பீடை; புத்திமான்களுக்குக்கூட வறுமை. இவையெல்லாம் ஆலோசிக்குமிடத்து விதிதான் வலிது என்று எனக்குத் தோன்றுகின்றது.

87. எல்லாக்குணங்களும் அமைந்தவனும், மனிதர்கட்குள் ஓர் இரத்தினம்போன்றவனும், உலகுக்கே யழகானவனுமான ஒருவனை சிருஷ்டித்து, உடனே யவனையழித்துவிடுவதென்றால், ஆஹா! கஷ்டம்! இந்தவிதிக்குத்தான் என்ன புத்திஹீனம்!

88. அமிருதத்துக்கே இருப்பிடமாயும், சகல (மருந்து) மூலிகைகளுக்கும் நாயகனாகவும், எப்பொழுதும் நூறு வைத்தியர் (சதபிஷக் நக்ஷத்திரங்)களால் சூழப்பட்டவனும், சிவபெருமான் தலைக்கோர் ஆபரணமாய் விளங்குகின்றவனுமான சந்திரனையே க்ஷய (ராஜயக்ஷ்மா) ரோகமானது விட்டு நீங்குவதில்லையென்றால், விதியின் தீர்மானத்தை எவனால் தான் தடுக்கக் கூடும்?

89 பிரிய சிநேகிதனே! துன்பமெனும் தடியின் அடி(வரிசை)களால் (அடிபட்டு) வேகமாய்ச் சுழன்றுவரும் கவலையெனும் சக்கரத்தில் இத்துஷ்ட விதியானது, தேர்ந்த குயவனொருவன் மண்ணைப் பிசைவதுபோல், இம்மனத்தை அழுத்திப் பிசைந்து, வைத்து, அச்சக்கரத்தைச் சுற்றிவிடுகின்றது. எதற்காக இவ்வாறு அதுசெய்கின்றதோ நாமறியோம்.

90. அட! புத்திகெட்ட விதியே! பலவிதமான துன்பங்களால் மகான்களுடைய தைரியத்தைக் கெடுக்க விரும்புகின்றாயே. அவ்விதமான கெட்ட முயற்சியை விட்டுவிடு. கல்பமுடிவிலும் இந்தக்குலபர்வதங்களும், சமுத்திரங்களும் தங்கள் நிலைதப்பி ஈனமாய் நடந்துகொள்ளமாட்டா.

91. இவ்வுலகில் சர்வவல்லமையுள்ள விதியால் ஒவ்வொருவனுக்கும் எவ்வளவு விதிக்கப்பட்டுளதோ, அதையவனடைகின்றான். பெரிய இடத்தை யண்டுவதால் கொஞ்சமேனுமல்ல (காரணமல்ல). எல்லாத்திசைகளிலும் மேகம் வர்ஷித்தபோதிலும், சாதகபக்ஷியின் வாயில் வீழ்வது இரண்டு மூன்று நீர்த்திவலைகள் தானே?

(இதை என்னுடைய உத்தரவின்றி எவரும் அச்சிடக்கூடாது)

R. வேஙகுநாராயண சர்மா, B. A., B. L.

நற்றிணை.

ஓர் ஐயவினா.

கடைச்சங்கப் புலவர் பற்பலர் தாம் தாம் ஒவ்வோரமையத்துக் கூறிய செய்யுட்களில் வரையறை செய்து தொகுத்தவை "தொகை நூல்க" ளெனப் பெயர் பெறும். இங்ஙனம் எட்டுத்தொகை நூல்கள் இக்காலத்துள்ளன. இவற்றுள் புறத்தின் பகுதிய வாகிய

(க) புறநானூற்றுக்கு, (இதுபோல வேறொரு நூலமைந்திலதாதலின்) அடி வரையறை செய்தாரிலர்.

(உ) பதிற்றுப்பத்து:—இந்நூல் கேரள ராச்சியத்தை யரசாண்ட சேரர் பரம்பரையாரைக் கூறலின் இதனையு நீக்கிவிட்டார். எஞ்சிய ஆறுநூல்களும் அகத்தின் பகுதியன. அவற்றுள் (க) பரிபாடல் அதற்குரிய பரிபாட லுறுப்பானும், (உ) கலித்தொகை அதற்குரிய கலியுறுப்பானும் அமையப் பெறுதலின், ஈண்டு அடி வரையறைக்கு வேண்டாவாயின. (௩) ஐங்குறுநூறு; இஃது ஐந்து புலவர்களாக்கிய ஐந்நூறு பாடல்கள்; ஆசிரியப் பாவிற்குக் கூறிய மூன்றடி முதலாகப் பாடப்பெற்ற ஒரு நூலாயமைதலின் அடியளவு கூறப்படவில்லை. எஞ்சிய அகவற்பாக்கள் தாம் அளவறிந்து தொகுக்கப் பட்டன. அவற்றுள் நான்கடிமுதல் எட்டடி வரையிலுள்ள பாடல்கள் ஒரு கூறும், ஒன்பதடி முதல் பன்னிரண்டடி வரையிலுள்ளவை ஒரு கூறும், பதின்மூன்றடி முதல் மேற்பட்ட அனைத்தும் ஒரு கூறும் ஆக மூன்று கூறுபடுத்தி நான்கடிமுத

லெட்டடி யளவுள்ள நானூறு பாடல்கள் கொண்டது குறுந்தொகை (குறுகிய பாடல்களால் தொகுக்கப் பட்டது) எனவும், பதின் மூன்றடிமுத லுயரப்பெற்ற நானூறு பாடல்கள் கொண்டது அக நானூறு (இது நெடிய பாடல்களால் தொகுக்கப்பட்ட தாதலின் நெடுந்தொகை 400 எனவுமாம்.) எனவும், இவ்விரு நூல்களினிடைப்பட்ட ஒன்பதடிமுதல் பன்னிரண்டடி வரையிலுள்ள நானூறு பாடல்கள் கொண்டது "நற்றிணை" யெனவும் பெயரிட்டார்கள். (இவ்வாயிரத் திருநூறு பாடல்களன்றி எஞ்சியுள்ள செய்யுட்களை அடியளவுக்குத் தக்கபடி தொகுத்துச் சிற்றடக்கம், பேரடக்கம் எனவும் வகுத்தனர் போலும்.)

மேற்கூறிய தொகை நூல்கள் பெரும்பாலனவற்றிற்கும் பாரதம் பாடிய பெருந் தேவனுரே காப்புச் செய்யுள் பாடியுளார். அங்ஙனம் பாடினவர் ஒன்றன் செய்யுளை மற்றொன்றற்கு மாற்றாத வாறு கருதி மூன்றடிச் சிற்றெல்லையாகிய ஐங்குறு நூற்றுக்கு மூன்றடியானுகிய பாடலாற் காப்பு அமைத்தார். நான்கடிமுதல் எட்டடி வரையிலுள்ள குறுந் தொகைக்குத் "தாமரை புரையுங்காமர் சேவடி" என்ற ஆறடிச் செய்யுளைப் பாடிக் கோத்தார். பதின் மூன்றடி முதலுயரப் பெறுகின்ற நெடுந் தொகையாகிய அகநானூற்றுக்கு "கார்விரி கொன்றை". என்ற பதினறடிச் செய்யுளைப் பாடிக் கோத்தார் இடைப்பட்ட ஒன்பதடி முதல் பன்னிரண்டடி வரையிலுள்ள நற்றிணைக் குரிய காப்புச் செய்யுள் முற்காட்டிய முறைப் படியின்றி ஏழடியளவாயுளது; வருமாறு:—

நற்றிணைக் காப்பு.

நேரிசை யாசிரியப்பா.

'பாரதம் பாடிய பெருந்தேவனுர் பாடியது'

"மாநிலஞ் சேவடி யாகத் தூநீர்
வளைநரல் பௌவ முடுக்கை யாக
விசும்பு மெய்யாகத் திசைகை யாகப்
பசுங்கதிர் மதியமொடு சுடர்கண் ணுக
வியன்ற வெல்லாம் பயின்றகத் தடக்கிய
வேத முதல்வ னென்ப
தீதற விளங்கிய திகிரி யோனே." என்பது கடவுள் வாழ்த்து

இச்செய்யுள் ஒன்பதடிக்குக் குறையாம லிருக்கவேண்டும்; என்ன காரணத்தாற் குறைபட்டதோ தெரியவில்லை. இது குறைபட்ட செய்யுள் தானென்பதற்கு மற்றொரு காரணமு முண்டு. அஃதாவது:—

இப்பெருந் தேவனார் வடமொழிப் பாரதத்தை மொழிபெயர்த்தவ ராதலின் அதில் வரும் விஷ்ணு ஸகஸ்ர நாமத்தின் தியான சுலோகமாகிய,—

பூ:பாதௌ யஸ்ய நாபிர் வியதஸுரநிலஶ் சந்த்ர ஸூர்யௌ ச நேத்ரே கர்ணாவாஶா: ஶிரோ த்யௌர் முகமபி தஹநோ யஸ்ய வாஸ்தேயமப்தி:।

அந்தஸ்ஸ்தம் யஸ்ய விஶ்வம் ஸுரநரககோ போகி கந்தர்வ தைத்யைஶ் சித்ரம் ரம்ரம்யதே தம் த்ரிபுவந வபுஷம் விஷ்ணுமீஶம்

நமாமி॥

என்பதின் மொழி பெயர்ப்பாக இந்தச் செய்யுளை இயற்றியிருக்கிறார். மேற்காட்டிய சுலோகத்தின் கருத்து முற்றும் இச்செய்யுளி லமைக்கப் படவில்லை யாதலாலும், இது குறைபட்ட செய்யு ளென்றே கருதுகிறேன். இன்னும் இதில் (கர்ணா வாஶா:) என்றிருத்தலால் மூலத்தில் திசை கை யாக என்றிருத்தற்குப் பதிலாக 'திசை செவி யாக' என்றிருக்க வேண்டும்.

இப்படிக் குறைவுபட்டதானது இற்றைக்கு எண்ணூறு வருஷத்தின் முற்பட்ட பேராசிரியர் தொல்காப்பியம் செய்யுளியல் (108) சூத்திரத்தி னுரையில் இப்பாடல் முற்றும் எழுடியின தாகவே காட்டி ஷை (158) சூத்திர வுரையில் "மாநிலஞ் சேவடியாக" என்பது எழுடியான் வந்தது எனக் காட்டியுள்ளார். ஆதலின் அவர் காலத்திற்கும் அநேக நூற்றாண்டுகளுக்கு முன் இப்பாடல் பிறந்திருக்க வேண்டும்.

நற்றிணை யேடுகள் வைத்திருக்கும் ஆன்றோர்கள் இப்பாடலை யாராய்ந்து வெளியிடுவாராயின் அவர் மாட்டு இவ்வுலகம் நிரம்ப நன்றி பாராட்டுங் கடமையதாகும்.

பின்னத்தூர், அ. நாராயணசாமி ஐயர்.

2 7 1

கல்யாணி.

இப்பரத கண்டத்தின் தக்ஷிண பாரிசத்திலுள்ள மேற்குத் தொடர்ச்சிமலையின் பிரிவாகிய "சித்திரைக்கானல்" என்னுமோர் மலையுண்டு. இம்மலையின் சிகரத்தை எப்பொழுதும் முத்து மாலை போல் அலங்கரிக்கும் சிற்றருவிகளால் வளர்க்கப்பட்ட பார்த்திப தீர்த்தம் என்ற பேர்பெற்ற ஓர் அருவிஅம்மலையின் கீழ்ச்சார்பில் வடிந்தோடி திருநெல்வேலிஜில்லாவின் ஓர் பாகத்தை நீர்வளமும் நிலவளமுமுறச்செய்கின்றது. இவ்வருவி பூமட்டத்திற்கு சுமார் 20 அடி உயரத்திற் "பேரணை" எனப்படும் "கல்லணை" யால் தடுக்கப்பட்டிருப்பதால் பளிங்குபோன்ற அதன் தெள்ளிய நீர், அணையைத் தாண்டி "ஜோ" என்ற பேரிரைச்சலுடன் அடிவாரத்திலுள்ள பாறைகளின்மீது விழும்பொழுது, அதனின்றும முத்துக்கள் சிதறுண்டதுபோல் நீர்த்துளிகள் நாநாபக்கமும் சிதறும். இவ்வருவி விழுமிடமானது முப்புறத்தும் அழகிய படிவரிசைகளாலும், அரசு, புரசு, வேம்பு முதலிய புண்ணிய விருக்ஷங்களாலும், அவற்றினடியில் கட்டப்பட்ட நாகர், லிங்கம், முதலியவற்றுடன் கூடிய குறடுகளாலும், ஆங்காங்கு அந்தணர் உட்கார்ந்து ஜபம் செய்யும்பொருட்டுக் கட்டப்பட்ட மண்டபங்களாலும், அலங்கரிக்கப்பட்ட தீரங்களால் சூழப்பட்ட ஓர் தடாகம். கரையோரங்களில் தென்னை, மா, கமுகு, பலா முதலிய ஜாதி விருக்ஷங்களடர்ந்த தோட்டங்களும், மல்லிகை முல்லை இருவாக்ஷி சம்பகம் முதலிய புஷ்பச்செடிகளும் நிறைந்த நந்தவனங்களும் கண்ணுக்கெட்டியதூரம் பச்சை நிறமாகப் புலப்படும், நெல்வேலிகளும், தேக்கு, வேங்கை, கருங்காலி முதலியவையடர்ந்த மலைச்சார்பும் நேத்திரானந்தத்தை விளைவிக்கும். இத்தடாகத்தின் ஓர் புறத்தில் பொற் சிகரத்துடன் கூடிய விமானமும் உயர்ந்ததிருமதிலும் தோன்றும். இதுதான் உமாமகேசுவரராலயம் என்ற ஓர் சிவாலயம். இவ்வாலயத்தின் கீழ்ப்புறம் ஓர் பெரிய கிராமமுண்டு. அது உமாபுரம் என்னப்படும். இதுவே நம் கதையின் காட்சி ஸ்தலம்; நிற்க.

கதிரவன் தன் பொற் கிரணங்களைச்சுருக்கிக்கொண்டு மலையின் மேற்புறம் மறையலாயினன். காகங்கள் கத்தின. கிளி, நாகணவாய்ப்புள்முதலியபேசும்பறவைகள் விநோதமாகச் சம்பாஷித்தன. குயில்கூவின. மயிலாடின. வண்டுகள் மலர்களிலுள்ள மதுவையுண்டு உங்கரித்து உலாவித்திரிந்தன. தருக்களின் இளந்தளிர்களைத் தழுவிக்கொண்டும், மலர்களிலுள்ள நறுமணங்களைவாரிக்கொண்டும், அருவிகளினின்றும் சிறு நீர்த்துளிகளை இறைத்துக்கொண்டும் இளந்தென்றல் வீசிற்று. காலைமுதல் மாலைவரைப்பாடுபடும் குடிகள், களைப்புத் தீரத் தடாகத்தில் மூழ்கிவிட்டு அரிச்சந்திரநாடகம், வள்ளியம்மைநாடகம் முதலியவைகளினின்றும் அநேக "தரு"க்களை உல்லாசமாய்ப் பாடிக்கொண்டு இல்லம் ஏகினர். ஆடுமாடுகள் மந்தை மந்தையாய் வயிறு நிரம்பப் புல் மேய்ந்து செருக்கினால் மண்ணைக் கொந்துவதும் மரம் கல் சுவர்களில் மோதுவதும் ஒன்றையொன்று முட்டுவதுமாய் "மா" என்று கதறிக்கொண்டே வீடுநோக்கிச்சென்றன. வாலிபர்கள் ஜதை ஜதையாய்க்கூடித் தரையிலுள்ள மணலின்மீது பலீன்சடுகுடு 'மாத்து மாத்து' பேய்ப்பந்து, கோட்டை ஓட்டம், முதலியன விளையாட ஆரம்பித்தார்கள். அந்தணர்கள் அக்குளத்தில் கைகால்கழுவி திருநீறுதரித்துக் கருமங்களைமுடித்துக் கரையின் மீது ஜபம் செய்ய வரிசைவரிசையாய் உட்கார்ந்தார்கள். கிராமப்பெண்டுகள் தேங்காய், பழம், வெற்றிலை, பாக்கு, புஷ்பம், கற்பூரம் முதலியன உள்ள தட்டை ஒரு கையிலேந்திக் கொண்டும் மற்றொரு கையில் நெய்க்கிண்ணங்களை ஏந்திக்கொண்டும் அணியணியாய்த் தடாகப்படி வரிசைகளிலிறங்கிக் கால்கழுவி மேலேறி கோவில் நோக்கிச் சென்றார்கள். அவர்களுள் யுவதிகளாயுள்ளவர்கள் தாங்கள் கணவனுடன் கூடிவாழ்வதைப்பற்றியும் தாங்கள் அடையும் சந்தோஷங்களைப்பற்றியும் தமக்குள்ள குறைகளைப் பற்றியும் ஒருவருக்கொருவர் சிங்காரமாயும் சிரிப்போடும் பரிகாசத்துடனும் சம்பாஷித்துக்கொண்டு சென்றனர். சிலவம்பர்கள் ஊரிலுள்ள சங்கதிகளெல்லாம் தங்களதெனக்கருதி "அவள் மாமியாரை வைதாள்" "இவள் மாட்டுப்பெண்ணைச் சரியாய் வைத்தாளவில்லை" என்று வம்பு பேசிக்கொண்டு சென்றனர். சிலர் தங்கள் புத்திரிக்கும், பௌத்திரிக்கும் புத்திரனுக்கும் உடம்பு சௌக்கியமாகவேண்டுமென்றும், சிலர் பிள்

னைக்கு சீக்கிரத்தில் குழந்தைபிறக்கவேண்டுமென்றும், பேரனுக்குச் சீக்கிரம் விவாகமாய் அவனை ஒரு குழந்தையுங் கையுமாய் பார்த்து விட்டுத் தாம் சாகவேண்டுமென்றும் பிரார்த்தித்துக்கொண்டு சென்றனர். வேறு சில கிழவிகள் எல்லாம் கரைகண்ட ஞானிகள்போல

"சங்கரியைப்பார்த்து சங்கரருமேதுசொன்னார்?
மாயவலையாலேகட்டுண்ட மானிடர்க்கு
அரகராவென்றுசொன்னால் அன்றுசெய்தபாவம்போம்
சங்கராவென்றுசொன்னால் ஜன்மம்தொலைந்துவிடும்
சிவசிவாவென்றுசொன்னால் சேர்வார்சிவன்பதத்தை"

என்று பாடிக்கொண்டு வழி நடந்தார்கள். இவ்வற்புதக்காட்சியுடன்கூடிய அன்றையமாலை ஒரு திருநாள்போலவே விளங்கிற்று.

இதற்குள் கிழக்குக்கடலினின்றும் சந்திரன் உதயமாகித்தனது அமிர்த சீதள கிரணங்களை நான்கு பக்கங்களிலும் வீசிக்கொண்டே விண்ணுலகேறி தாராகணங்களின் மத்தியில் சஞ்சரிக்கலாயினன். அவனது கிரணங்களால் மரத்தின்இளந்தளிர்கள் மரகதம்போலவும் அருவிநீர் பளிங்குபோலவும் பிரகாசிக்கின்றன.

இஃது இவ்வாறிருக்க, கழுத்தில் ருத்திராக்ஷமும், உடல் முழுதும் கட்டுக்கட்டாக விபூதியும் தரித்த ஒருவர் தடாகத்தினின்றும் கரையேறித் தன்னுடைய மூன்றுவதுவஸ்திரத்தைநான்காகமடித்து மணலின்மீது விரித்து "ஹரே! கோபால, கிருஷ்ண, வாசுதேவ, கைலாசபதே சம்போ சங்கர மகா தேவ பாஹி" என்று சொல்லிக்கொண்டே அதன் மேல் மேற்குநோக்கி உட்கார்ந்து ஜபம் செய்ய ஆரம்பித்தார். இவர் நுனிக்குடுமியில் சூட்டியிருந்த பூத்துண்டும் நெற்றியிலணிந்த குங்குமப் பொட்டும் உடுத்தி யிருந்த புதுக் கச்சை வஸ்திரமும, இன்னும் வாடாத தொந்தியும் அடிக்கடி விடும் உளுந்து வடை ஏப்பமும் அன்று இவர் பிராமணார்த்த முண்டவர் என்று நன்கு விளக்கின. உண்மையில் இவர்க்கு சஷ்டி பூர்த்தி சாந்தி யாயிருந்தும் பார்ப்பவர் 45 வயதுக்கு மேல் மதிக்க மாட்டார்கள். இவர் தான் அப்பு ஜோஸ்யர். இவரை யாவரும் 'ஜோஸிய தாத்தா' வென்றும், குழந்தைகள் 'தொந்தித் தாத்தா' வென்றும் கூப்பிடுவது வழக்கம். தாம் மறு விவாகம் செய்து கொண்டிருப்பதால்

யாராவது 'தாதா' என்று கூப்பிட்டால், "அடா! பையன்களா என்னுடைய பலம் உங்களுக் கேது? உங்கள் வயதில் நான் ஏறாத மரம் கிடையாது; தாண்டாத சுவரில்லை; அந்த அரசமரத்தின் நுனியிலிருந்து குளத்தில் தொப்பென்று குதிப்பேன்; போங்கடா சோதாப் பயல்களா!" என்று கேலி பண்ணுவர்.

சிறிது தூரத்தில் மூன்று யௌவன புருஷர்கள் சிரித்துக்கொண்டும், வேடிக்கையாய்ப் பேசிக் கொண்டும் சந்தோஷமாய்ப் பாடிக் கொண்டு மிருந்தார்கள். அவர்களுக்கு அப்பொழுது தான் யௌவன பருவ மாதலால் அவர்கள் பேசிய பேச்சும், பாடிய பாட்டும் சிற்றின்பத்தை ஒட்டியே யிருந்தன. அவர்கள் மூவரும் ஏறக் குறைய சமவய துடையவர்கள். இவர்களுடைய பக்கத்திலிருந்த ஓர் கல்யானை மீது இதே வயதுள்ள ஒருவன் சாய்ந்து கொண்டு இவர்கள் சம்பாஷணையைக் கவனியாமல் என்னென்னவோ ஆலோசித்துக் கொண்டிருந்தான். இவர்களும் அவனை லக்ஷியம் பண்ணமல் பேச்சு மோகத்திலேயே இருந்து விட்டார்கள். மேற் சொன்ன மூவரில் ஒருவன் திடீரென்று பேச்சை நிறுத்தி மற்றொருவனை நோக்கி,

'என்ன' கிருஷ்ணசாமி, நீ சொல்லுவது எனக்குப் பிடிக்க வில்லை. சிற்றின்பத்தைப் பற்றி வீணில் பேசுவதில் யாது பயன்? நாழிகையோ ஆய்விட்டது! என்று சிரித்துக் கொண்டே சொன்னான்.

அதற்கு சுந்தரம், "கிட்டு! நமது அம்மான் சேய் சங்கரன் சொல்வது முற்றிலும் சரியே. வீண்பேச்சு அவனுக்குப் பிடிக்காதுதான். எதையும் காரியாம்சையில் காட்டவே அவனுக்குப் பிரியம். ஆமாம். மணி ஏழடித்துவிட்டதல்லவா? என்னவென்றாலும் புது மாப்பிள்ளை. அவன் சாப்பிட்டுவிட்டு எட்டுமணிக்காவது போய்க்காத்துக்கொண்டிருந்தால்தான் சௌகரியமாயிருக்கும்" என்றான்.

(இன்னும் வரும்)

R. S. நாராயணசாமி அய்யர் B. A., B. L.

* வான்கோழியும் எறும்பும்.

பிறரிடத் துள்ள பிழையைநாம் காண்கிறோம்.
(நம்இரு கண்ணையும் நாளும் பெரிய
உத்திரம் மறைப்பதை உணர்ந்தி டாது)
மற்றவர் கண்களை மங்கச் செய்கிற
சிறுபுன் துரும்பையும் குறைகூ றுகிறோம்.
அவரிடத் துள்ள அற்பத் துகளையும்
களங்கத் தையும்நாம் காண்கிறோ மெனினும்,
நம்மிடத் துள்ள தனிபெருங் குற்றங்
குறைகளைக் காண்பதிற் குருடரா கின்றோம்.
(இதைவிளக் குஞ்சிறு கதைவரு மாறு:—)

சாதா ரணஇரை யேதின் றலுப்புற்
றொருவான் கோழி(தன் உறைவிட மாகிய)
களஞ்சியம் நீங்கிஓர் கானகம் சென்றது.
அதற்குப் பின்னல் அதன்சிறு குஞ்சினம்
இங்கொரு மணியும் அங்கொரு மணியுமாக்
கூட்டிக் கொரித்துக் கொண்டே சென்றன.
தன்குஞ் சுகளைத் தாய்ப்புள் நோக்கி,
" அருமை மக்காள்! அருகினில்† வம்மின்,
இக்குன் றினிய இரைஅளிக் கின்றது.
காணுதிர் சோம்பல்இல் கார்எறும் பினத்தினை!
கோடிக் கணக்காக் கூடிக் கரேல்என
எங்கும் மொய்த்தவை இருப்பதைப் பார்மின்!
அஞ்சலிர். என்போல்|| அயிலுதிர் தடையற.
எறும்பு நமக்கோர் இனியஆ காரம்.
கோழிக் காரனின் கொடுவாட்கு மட்டும்

[*இது ஜான் கே என்ற ஆங்கிலக்கவிஞர் இயற்றிய "கட்டுக்கதை" களுள் ஒன்றாகிய " The Turkey & The Ant " என்பதன் தமிழ்மொழி பெயர்ப்பு.]

† வம்மின்—வாருங்கள். || அயிலுதிர்—தின்னுங்கள்.

விலகித் தப்பி விடுவோ மாயின்
நம்வாழ் வெத்துணை நற்சுக முற்றதும்
எவரும் பொறுமை எய்தத்தக் கதும்ஆம் !
ஆனால் பாவி மானிடன் நம்மைப்
பட்சிக் கின்றான். பண்டிகைத் தினங்களோ
நம்முழு நாளையும் *நலிவிக் கின்றன.
சிலவே ளைகளிற் சிப்பிக ளுடனும்
சிற்சில வேளை ||எற்புக் கறியொடும்
¶பாகம் செய்யப் படுகின் றோமே.
உயர்கோ மானின் உண்கலம் முதலா
அற்பச் சிறுகுடி யானவன் கலம்வரை
வான்கோ ழிக்கறி தான்மணக் கின்றது.
சூழ்கொடும் பாவத் தேழினும் கொடிய
மீதூண் நிமித்தம் தீதுறு மானிடர்
சபிக்கப் படுவது சத்தியம்.'' என்னலும்,
இதனைக் கேட்டதற் கெட்டாத் தொலையினில்
ஏறிக் கொண்டனள் எறும்பதைப் பார்த்துப்
"பிறர்க்குறும் பிழைகளைக் குறித்திடும் முன்னர்
உன்னுள் குற்றம் உளதா இலதா
என்சோ திக்கஉன் மனச்சாட் சிக்குரை.
அதிகத் தீனிக் காசைப் படும்உன்
வாயைக் கட்டுதி; மற்றிஃ தன்றியும்
ஒருபொழு துண்ணும் உணவிற் காகக்
குலம்குல மாகக் கொல்லுதல் ஒழிதி''
என்ன அருகில் இருந்தவள் மரத்தில்
இருந்து மறுமொழி யினைஅளித் ததுவே.

ம. கோபாலகிருஷ்ணையர்.

* நலிவி—வருத்து, குறைத்திடு. || எற்பு—எலும்பு. ¶ பாகம்—சமையல்.

அன்னையும் பிதாவும்.

(283-ம் பக்கத்தொடர்ச்சி).

இனி விடலைப்பருவம் நீங்கி மூப்பு வரவே, முந்திய பருவத்தில் உலக அனுபவம் இத்துணைத்து என்றுகண்டு கழித்துள்ள ஏதுவினால், மனிதர்களைச் சந்நியாசிப் பருவம் அடைந்தவர்கள் என்றே சொல்லலாம். ஆயினும் இவர்களும் பெற்றோர்களுக்குச் செய்து தீரவேண்டிய கடமைகளைச் சரிவரச் செய்யவேண்டியதே. இல்லையேல் நரகமே அவர்களுக்கு பிராப்தியாம். இவ்வுண்மைகளை,

தந்தைதாய் குரவன் மைந்தன் தனதுமா ணுக்கன் இந்த
ஐந்துபேர் கடன்கள் ஆற்றும் அதுதுற வாகும் அல்லால்
மந்திர காவி சாத்தி மறுசன்மம் அடைந்தா னேனும்
இந்தமுற் கடன்கள் ஆற்றான் எழுநர கடைவன் அன்றே."

என்பதால் அறிக.

இப்பருவத்திற்கு முற்பருவத்தில் கூடப் பெற்றோர்கள் நம்மை வளர்க்கும்போது பட்டபாடுகள் நமக்குப் புலப்படுவதில்லை. இப்போது தான் நாம் குழந்தைகளைப் பெற்று வளர்க்கும் பாடுகள் அனுபோக சித்தமாய் விளங்கும் காலம். ஆதலின் "இப்படித்தானே பெற்றோர்கள் நம்மையும் வளர்த்திருப்பார்கள்" என்ற நம்பிக்கை நமக்குண்டாகிறது. உண்டாகவே, நமக்கு 30 வயது ஆனபின்னும் நம் பெற்றோர்களைக் கனப்படுத்தவேண்டியது இன்றியமையாததெனப் புலப்படும் என்பது திண்ணம்.

நாம் பிறக்கும்பொழுது அறிவுவிளக்கமற்று பலஹீனராய் இருந்தது போலவே, நம் பெற்றோர்களும் கிழப்பருவத்தில் அறிவு மழுங்கி வலிமைகுன்றியிருத்தல் சகஜமே. அக்காலத்தில் மகனும் மருகியும் மனது ஒருப்பட்டு அவர்களுக்குச் செய்யவேண்டிய வழிபாடுகளைச் செய்யக் கடமைப்பட்டிருக்கிறார்கள். இளம்பருவத்தில் அறியாமையால் பெற்றோர்களை நாம் வையும்போது நமது குழறுபாடான சொற்களையும் புன்சொற்களையும் அவர்கள் கேட்டு மகிழவில்லையா? அவர்களுடைய வாக்கிலிருந்து இப்போதுண்டாகும் கோபாவேச வன்சொற்கள் அனைத்தையும் இன்சொற்களாகக் கொண்டு மகிழ

வேண்டாவோ? நமது மலஜலாதிகளில் அவர்களுக்கு அருவருப்புத் தோன்றிற்று? இல்லையே. அவர்கள் "பல்லும் பார்வையும் சொல்லும் சுவையும், யாவு மிழந்து யாவு மறந்து, மறுவலும் சேயென மதித்த னர் வெய்திய" இப்பருவத்தில் அவர்களுடைய மலஜலாதிகளைக்குறி த்து அருவருப்படைதல் எவ்வளவு அநீதி? நிற்க.

அறிவறிந்தமக்கள் தமது இளம்பருவத்தில் அடித்துச் சோறு ஊட்டவும், பயப்படுத்தி மருந்தூட்டவும், உபாத்தியாயரால் உறுக் கிப் படிப்பிக்கவும், பெற்றோர்களுக்குஅடங்கியும் இருந்தது உண்மை யேயாயினும் மடமைக்காலத்துள்ள அவ்வடக்கம், அடக்கமாக மாட்டாது. ஆண்மை மேலிட்ட பருவத்தில் பெற்றோர்களுக் குக் கீழ்ப்படிதல்தான் அடக்கமுடைமையாம். ஆதலால் புத்திமா ன்கள் ஒவ்வொருவரும், 'நம்மை மேலான நிலைமைக்கு ஆளாக்கி விட்ட தெய்வம் யாவர்? அவர்களின் கருத்து யாது? அவர்களுக்கு நாம் செய்யவேண்டிய கடமைகள் என்னை?' என்பவைகளை ஆராய் ந்து நடந்து பெற்றோர்க்குப் பிரீதி உடையவர்களாய் அவர்களுக்குக் கீழ்ப்படிந்து, அவர்கள் பொறுப்பில் இருந்த குடும்பபாரத்தை வகி த்து, அவர்களுக்கு வேண்டியவைகளை அன்புகூர்ந்து உதவி, செய்ய வேண்டிய வழிபாடுகளைச் சந்தோஷமாய்ச் செய்துவரவேண்டும். இவ்வுண்மைகளுக்கு,

"வைகறை யாமந் துயிலெழுந்து தான்செய்யும்
நல்லறமும் ஒண்பொருளும் சிந்தித்து வாய்வதில்
தந்தையும் தாயும் தொழுதெழுக என்பதே
முந்தையோர் கண்ட முறை".

"தந்தை யாயினோர் இனிதுவீற் றிருப்பதும் தமது
மைந்தர் தம்குடி பரித்தபின் அன்றிமற் றுண்டோ".

"சிதலை தினப்பட்ட ஆல மரத்தை
மதலையாய் மற்றதன் வீழ்ஊன்றி யாங்குக்
குதலைமை தந்தைகட் டோன்றின் தான்பெற்ற
புதல்வன் மறைப்பக் கெடும்".

"இறந்த மூப்பின ராய இருமுது
குரவருங் கற்புடை மனைவியும் குழவியும்

பசியான் வருந்தும் எல்லேக்கண்
*தீயன பலவும்செய் தாயினும் புறந்தருக".

"ஈன்று வளர்த்த தாய்தந்தைக்கெவரே கைம்மா றியற்றிடுவார்
ஆன்ற மதலே நூறுவய தளவும் அடிமைத் திறம்பூண்டு
மூன்று புவனத் துள்ளபொருள் முற்றும் அளித்து முறைமுறையே
ஏன்ற வழிபா டியற்றிடினும் ஒருநாள் வளர்த்தற் கிணையாதே."

என்ற இவைபோன்ற ஆன்ருேர் திருவாக்குகள் மேற்கோளா யின்மை காண்க.

இவ்வாறு நாம் பெற்ருேரை வழிபடும்போது நம்மக்கள் அதனைப் பார்த்துக்கொண்டிருந்து நமக்குத் தளர்நிலே எய்திய காலத்தில் நமக்குரிய வழிபாடுகளைக் குறைவின்றி நடத்துவார்கள். இதுவே நாம் பெற்றுக்கொள்ளவேண்டிய பெரும்பேறு என்க. "உழுகிற காலம் ஊர்வழிபோனல் அறுக்கிற காலம் ஆள் தேட வேண்டாம்" என்னும் பழமொழிக் கேற்ப நம் பெற்ருேர்க்கு நாம் சரியான வழிபாடு செய்யவில்லேயாளுல் நமக்குரிய வழிபாடு சரிவர நடைபெறுவதற்கு நாம் ஆள்தேடி வைக்காதவர்களே ஆவோம்.

ஆதலின், புத்திமான்கள் தாம் தமது தளர்நிலேயில் நிராதரிகளாய்த் திண்டாடாதபடியேனும் பெற்ருேர் வழிபாட்டில் பிரீதி உடையோராய் இருந்து சுகவாழ்வு எய்தி உய்வார்களாக.

"ஈன்ருரில் என்ன கடவுளு மில்."

த. ஆறுமுகநயினர் பிள்ளே.

---

* 'தீயன பலவும் செய்தாயினும் புறந்தருக' என்பது பெற்ருேரைப் பேணவேண்டியது என்னும் ஒரு அவசியத்தைமட்டும் அறிவுறுத்திற்றேயன்றி தீவினே செய்யத் தோன்றிற்றில்லே. இவ்வுண்மை, 'ஈன்ருள் பசிகாண்பாளுயினும் செய்யற்க—சான்ருேர் பழிக்கும் வினே.' என்ற சுருதி போதத்தால் போதரும். அப்படியாளுல், தீயனபலவும், என்பதுதான் என்னே யெனின், தமது அந்தஸ்துக்குக்குறைவான குற்றேவல்கள் புரிதலே எனக்கொள்க.

2-80

புத்தகக்குறிப்பு.

வேதாந்தப்பிரதீபம்:—இது வேதாந்த விஷயங்களை வினாவிடையாக யாவரும் எளிதிலறிந்து கொள்ளுமாறு தக்கமேற்கோள்களுடன் தெளிவான தமிழ் வசனத்தில் எழுதப்பெற்றதொரு சிறந்த நூல். வேதாந்தவிசாரணைசெய்து சர்வதுக்கநிவிர்த்தி பரமானந்தப் பிராப்தியடைய விரும்புவார்கருத் தக்கதுணை புரியுமாறு அநுபந்த சதுட்டயப் பிரகரணம், சாதனசதுட்டயப்பிரகரணம், உபதேசப் பிரகரணம், சமாதிப்பிரகரணம், ஜீவன்முத்திப் பிரகரணம், என ஐந்து பிரகரணங்களாக வகுக்கப்பெற்று ராயல் பதினறில் 272 பக்கங்களில் நல்லகடிதமும் எழுத்தும் பயின்டு முடையதாக அமைக்கப் பெற்றுள்ளது. பலரும் வாங்கிக் கற்கவேண்டியே இதன் விலை அணு 12 எனச் சுலபமாகவும் விதிக்கப்பட்டுளது. இந்நூலாசிரியர் வற்கலை சிவகிரி மடாலயம் ஸ்ரீ நாராயணகுருசுவாமிகள் மாணுக்கர் ஸ்ரீ இராமசுவாமிகளவர்களே. திருநெல்வேலி கற்கண்டு வியாபாரம் ஸ்ரீ சே. பிச்சாண்டிபிள்ளையவர்கள் பொருளுதவியால் அச்சிடப்பெற்றது. வேண்டுவோர் ஷை பிள்ளையவர்களிடம்பெற்றுக்கொள்ளலாம்.

மானிடமர்மசாஸ்திரம் அல்லது சிசு உற்பத்தி சிந்தாமணி:—இந்த நூலைப்பார்த்து மிக மகிழ்ந்தோம். இதன் ஆசிரியராகிய ரங்கோன் வாசி ஸ்ரீமாந். எஸ். சாமிவேல் பீ. ஏ. அவர்களை நாம் நேரிலுமறிவோம். இவர் லண்டன் முதலிய பலவெளிநாடுகளிற்சென்று நூலாராய்ச்சியாலும் அனுபவத்தாலும் பல அரிய விஷயங்களைத் தெரிந்துவந்து உலகத்தார்க்குப் பயன்படவேண்டியே இந்நூலையெழுதி வெளியிட்டிருக்கின்றார். உடற்கூற்றுவகையும், பிணிமூலங்களும், பிணியை வராமற்காத்தலும், வந்தாற்போக்கலும், கர்ப்பமுறைகளும், குழந்தைகளைப் பாதுகாக்கு முறைகளும், மற்றும் பல அரிய விஷயங்களும் பற்பல சித்திரப்படங்களுடன் நன்ருக விளக்கப்பெற்றதான இச்சிறந்தநூல் தமிழ்தெரிந்த ஒவ்வொருவர் கையிலும் இருத்தற்குரியதாம். இந்நூலாசிரியர் ரஞ்சிதபோதினி யென்ற மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை யொன்றை ரங்கோனில் நடத்திவருகி

ளர். மானிட மர்ம சாத்திரமானது டெம்மி 500 பக்கங்கட்கு மேலிருக்கிறது. வெகு அழகாகப் பயிண்டு செய்யப்பெற்றது. சுத்தமான பதிப்பு. புத்தகம் 1க்கு விலை ரூ. 5. இந்நூலாசிரியர் மிக்க சிரமப்பட்டு இந்நூலை யெழுதி வெளியிட்டதுடன் இரங்கோன் கப்பல் வர்த்தகரும் முனிசிபல் கௌன்ஸிலரும், ஆனரரி மேஜிஸ்திரேட்டும், பெருங்கொடை வள்ளலும், நமது ஆங்கில கவர்ன்மெண்டாரால் நன்கு மதிக்கப் பெற்றவரும், செந்தமிழபிமானச் செல்வரும், ஆகிய ஸ்ரீமாந் ராயபகதூர் பே. மா. மதுரைப்பிள்ளையவர்கட்கு இந்நூலை அர்ப்பணஞ் செய்திருத்தல் மிகப் பாராட்டற்குரியதாம்.

திருக்குறள் வசனம்:—இது பண்டிதர் பாமரர் பலர்க்கும் பயன்படுமாறு இனிய எளிய தமிழ் நடையில் திருமுல்லைவாசல் சப் போஸ்டுமாஸ்டர் ஸ்ரீ பு. து. இரத்தினம் பிள்ளை அவர்களால் எழுதப்பட்டுள்ள திருக்குறளின் பொழிப்புரையாகும். பொது அறிவும் நீதியும் புகட்டக்கூடிய இந்நூலை சில கலாசாலைத் தலைவர்கள் பாட புத்தகமாக ஏற்படுத்தியிருப்பதை அறிந்து சந்தோஷிக்கிறோம். மூலமும் சேர்க்கப்பட்டிருப்பின் இன்னும் நன்றாக இருக்கும். இதன் விலை ரூ. ஒன்று.

ஐவன்ஹோ:—இது ஸர்வால்டர் ஸ்காட் என்னும் மேற்றிசைப் புலவர் இயற்றிய (Ivanhoe) என்ற நவீன கதையின் சாராம்சமாகத் தமிழில் கும்பகோணம் நேடிவ் ஹைஸ்கூல் உபாத்தியாயர் ஸ்ரீ S. பஞ்சாபகேச சர்மா B. A. அவர்களால் இயற்றப்பட்டது. யாரும் சாமானியமாய்ப் படித்து சந்தோஷிக்கத்தக்க விதமாய் இது எழுதப்பட்டுள்ளது. இவ்வழகிய சிறுநூலின் விலை அணா 6.

பத்திராதிபர்.

282

சமாசாரக்கொத்து.

:-o-:

பாரீஸில் ஓயாமல் சிலதினங்கள் மழை பெய்ததால் ஸீன் ஆற்றில் வெள்ளம் இருகரையும் புரண்டோடி நடுப்பட்டணம்வெள்ளத்தில் மூழ்கி ஒரு பெரிய ஏரிபோல் காணப்படுகிறது. சரித்திரங்களிலும் தற்காலத்திலும் பிரஸித்திபெற்ற பல கட்டிடங்களை வெள்ளம் சூழ்ந்துவிட்டது. கோபுரவாசல்களை பலமாக மண் கல் முதலியவைகள்போட்டு அடைத்துவிட்டார்கள். ஸென்த் லொஜேர் என்னும் பாகமானது பலமான ஒரு பகுதி சேனையாட்களால் காக்கப்பட்டு வருகிறது. சில தெருக்களில் வெள்ளம் பெருகுவதும் குறைவதுமாயிருக்கிறது. வீடுகளெல்லாம் இடிந்து விழுந்துகொண்டும் விழுந்துவிடும்போலும் இருக்கின்றன.

*　　　*　　　*

ரோம் நகரில் ஒரு விசித்திரமான புஸ்தகசாலை ஏற்படுத்தப்போகிறார்கள். இதில் ஆதிமுதல் இதுவரையில் வெளிவந்துள்ள வர்த்தமானப் பத்திரிகைகளைச் சேகரிக்கப்போகிறார்களாம். இதற்குள் 2 லக்ஷம் வர்த்தமானப் பத்திரிகைகள் சேர்ந்துளவாம்.

*　　　*　　　*

நேபாளதேசத்து மந்திரியாகிய மகாராஜா ஸர் சந்திர டஹதூர் ராணா என்பவர் 6330 ஸம்ஸ்கிருத புஸ்தகங்களை ஆக்ஸ்போர்ட் ஸர்வகலாசாலைக்கு சம்பந்தப்பட்ட பாட்லியன் லைப்ரெரி என்னும் புஸ்தகசாலைக்கு இனமாய்க் கொடுத்தார். இவருடைய உதாரகுணத்தை சர்வகலாசாலா கம்மிட்டியார் அதிகமாய்க்கொண்டாடி மந்திரிக்கு வந்தனபத்திரம் எழுதியனுப்பியிருக்கிறார்கள்.

*　　　*　　　*

லாகூரில் உள்ள ராவில்பிண்டியில் ஓர் குரங்காட்டி குரங்கோடு சென்றுகொண்டிருந்ததைக் குடித்து மயக்கொண்ட சில ஐரோப்பிய சிப்பாய்கள் பார்த்து அவனைப்பின்தொடர்ந்தார்கள். அவன் திடீரென்று இவர்கட்குத் தெரியாமல் மறைந்துபோனான். இவன்போனதாக இவர்கள் நினைத்த திக்கிலிருந்து அவ்வூர்ப்பட்டாளக் கோவேறுகழுதைக்காரனொருவன் அவ்வழியாக வந்ததும், 'அவனைக் குரங்காட்டியைப் பார்த்தாயா இல்லையா' என்று மேற்படி சிப்பாய்கள் கேட்டார்கள். அதற்கு மறுமொழி மஹம்மதியன் சொன்னதும், அவனைச் சிப்பாய்கள் கீழேதள்ளித் தமது காலிலிருந்த பூட்சால் மிதித்து அடிக்கவே அவ்விடத்திலேயே அந்தமகம்மதியன் இறந்துபோனான். இந்தச் சிப்பாய்களுடைய பெயர் நம்பர் முதலிய குறிகளை இராணுவபோலீசார் குறித்திருக்கிறார்கள்.

பத்திராதிபர்.

283

இராக்கதர்.

(The Rakshasas.)

மக்கட்பிறவியினின்றும், தோற்றத்திலும், வடிவமைதியிலும், உடல்வன்மையிலும், தாளாண்மையிலும், நீடித்த வாழ்நாளிலும், இயற்கைத்தன்மை முதலியவற்றிலும் முற்றிலும் வேறுபாடுடைய பிறவியுற்ற இராக்கதர்களிருந்ததாக மிகத்தேர்ச்சியுடைய நம் நாட்டவர்களுமொப்புகிறார்கள். அதிற் சிலர்க்கு விபீஷணர் இப்போதும் இலங்காபுரியில் அரசியல் புரிவதாக நம்பிக்கையுண்டு. ஆகையால் கல்வியிலாதவர்க்குள் அவ்வித நம்பிக்கையிருத்தல் வியப்பன்று.

எண்ணுங்கால் இவ்வுருவ மாறுபாடுகள் ஆரியரின் உளவேறுபாடுகளின் நிகழ்ச்சிகளேயன்றி வேறல்ல. அவர்களுடைய முதல் நூல்களிலொன்றிலேனும் இப்பிறவியைச் சுட்டியிருப்பதாய்க் கண்டிலம். இருக்கு வேதத்தில் கள்ளர்கூட்டத்தைக் குறிக்குமிடத்து இராக்கதரையு மொருசாராக முதல் மண்டலத்திற்றானே வெளியிடப்பட்டிருக்கின்றது. அதிலும் உபநிடதங்களிலும் அவர்கள் பிறப்பைக் குறித்தற்கிடமில்லை. இருக்குவேதகாலத்துக்கு அனேக நூற்றாண்டுகளுக்குப்பின்னெழுந்தபாரதஇராமாயணசார்புநூல்களில் மட்டுமே அதுவெளியிடப்பட்டிருக்கின்றது. மகாபாரதம் ஆதிபருவத்தில் 65, 66, 95–ம் அதிகாரங்களில் இராக்கதர்க்கு முதல்வர் பிரமபுதல்வர்களாகிய காசிபரும், புலத்தியருமென்று விவரிக்கப்பட்டிருக்கின்றது. காசிபருடைய பலமனைவியருள் தென்னாட்டரசனாகிய தக்கன் புதல்வி கிரீடையின் வழித்தோன்றல்கள் சில இராக்கதரென்றும், புலத்தியர் வழியுள்ளாரும் பிறவழியுள்ளாரும் வேறு சிலரென்றுங் காட்டப்பட்டிருக்கின்றன. அடியிற்காண்பவை ஆரிய நூற்படி இராக்கதர்களின் பெரும்பாலர்களின் குலமுறை.

கடவுள் முதல் முதல் நீரையும் அதைக்காக்கும் வண்ணம் சில மன்பதைகளையும், உண்டாக்கி முறையான கட்டளையிட்டார். அங்

ஙன மேற்பட்ட மன்பதைகள் நீரைக்காக்கலைப்பினதாக 'ரெக்ஷாமா' எனக்கூறினார்கள். இதன்வழி அவருக்கு "ராக்ஷதர்" எனப்பெயர் கொடுக்கப்பட்டது. அவரிற் சிலரின் விடாநோன்பு முதலியவற்றாலே தத்தம்நிலைமை வலிமைகளிற் பெருக்கமுற்றவராயினர். (வால்மீகி இராமாயணம் உத்தரகாண்டம் 4-ம் அதிகாரம் நோக்க,)

இதனால் ஆரியர்களெவ்வளவோ புனைந்துரைத்தும் இவ்விராக்கதர் மக்கட்பிறவியினின்றுங் கொஞ்சமேனுங் கூடுதல் குறைவுடையவர்களல்லரென்பது தேற்றம். ஒளிப்பற்ற வெளிப்படையாகப் பேசுங்கால், இராக்கதர்களெவ்வளவோ முதிய விழுமியோராக நிற்பர்.

ஆரியர்கள் முதல் முதல் தென் இந்தியாவை அடுத்தகாலத்தில் தங்களிலுமுயர்ந்தும், கறுத்தும், எவற்றிற்கும் பின்னிடையாத தறுகணாண்மையுற்றுமிருந்த சில மறவர்களைக் கண்ணுற்றார்கள். மன்பதைகட்குரியதொழில்களில் இவர்கள் அரசுரிமையையும் உயிரோம்பலையும், பொருள்காப்பையுங்கைக்கொண்டிருந்தனர். திருவிடத்தில் ஐந்திணையாருள் இவ்வினத்தார் பாலை நிலமாக்கள். ஆகையால் நமக்கடுத்துள்ள உடன்பிறவிகளே. ஆரியர்கள் ஆங்காங்குள்ளவர்களுக்கமைத்த பழிமொழிப் பெயர்களுள் இவர்கட்கு இரா+கதர்—இராவில் நடப்போரென அவர் கடமையின்பொருட்டு பெயருண்டாக்கினர்.

இச்சிறந்த கூட்டத்தவரிற்சிலர் தீயொழுக்கங்களிற் றலைப்படத் தொடங்கினர். ஆயினும் நல்வழியிற்றிருப்பவேண்டுமென்று உளங்கூர்ந்து அங்கிலேய அரசாட்சியார் அவர்களை காலாட்படைகளுள் சேர்த்துப் பழக்க எவ்வளவோ முயன்றும் பயன்படவில்லை. ஆதலினிவரை நன்னெறிக்குய்ப்பது மற்றுள்ள உடன் பிறவிகளின் கடமையே.

தா. பொன்னம்பலம் பிள்ளை.